. 4 பக்கங்கள் . விலை ரூ. 5





# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936





www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 28.04.2026 • மலர் 04 • இதழ்: 118 • Edition : Nagercoil • 28.04.2026 • Vol : 04 • Issue : 118 • Page : 4 • Rs. 5/-

### வாக்கு எண்ணிக்கையின்போது

# மிகுந்த எச்சரிக்கை அவசியம்

## தவெக வேட்பாளர்களுக்கு தலைமை உத்தரவு



மிகுந்த எச்சரிக்கை அவசியம்:

சென்னை

தமிழகச் சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியாவதற்கு இன்னும் சில தினங்களே உள்ள நிலையில், தவெக தலைமை, தனது வேட்பாளர்களுக்கு முக்கிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் 23 ம் தேதி நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முடிவுகள், வரும் மே 4ம் தேதி வெளியாகஉள்ளன. ஆட்சிக்கட்டிலில் அமரப் போவது யார் என்பதில் ஆளுங்கட்சியான திமுக, பிரதான எதிர்க்கட்சியான அதிமுக மற்றும் முதல் தேர்தலைச் சந்தித்துள்ள தவெக ஆகிய மூன்று கட்சிகளுமே அதீத நம்பிக்கையில் உள்ளன.

குறிப்பாக, முதல் தேர்தலிலேயே ஆட்சி அமைக்கத் தேவையான இடங்களைப் பிடித்து விடுவோம் என்கிற நம்பிக்கையில் தவெகவினர் உற்சாகத்தில் இருக்கிறார்கள்.

இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களாக பனையூரில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் தீவிர ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

வாக்கு எண்ணிக்கை நாளன்று வேட்பாளர்கள் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் தேர்தல் முடிவுகளுக்குப் பிந்தைய அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து இந்தத் தொடர் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

அதாவது தேர்தலுக்குப் பிந்தைய களநிலவரங்கள் குறித்து தவெக கட்சித் தலைமை நடத்திய விரிவான ஆய்வில், அக்கட்சி பலதொகுதிகளில்வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக இருப்பது தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பனையூரில் புஸ்ஸி ஆனந்த், செங்கோட்டையன் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியுள்ளனர். இந்தக் கூட்டத்தில் ,50,000க்கும் அதிகமான வாக்குகளைப் பெற வாய்ப்புள்ளதாகக் கருதப்படும் 40க்கும் மேற்பட்ட முக்கிய வேட்பாளர்கள் நேரில் அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களிடத்தில் புஸ்ஸி ஆனந்த், செங்கோட்டையன் தேர்தல் முடிவு நாளில் பின்பற்ற வேண்டிய வியூகங்கள் குறித்து முக்கிய அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கிறார்கள்.

ஆலோசனைக் கூட்டத்தில் புஸ்ஸி ஆனந்த், செங்கோட்டையன் பேசுகையில், "தேர்தலுக்கு பிந்தைய கள ஆய்வுகள் நமக்குச் சாதகமாக உள்ளன.

மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும்போது, வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். ஒவ்வொரு சுற்று முடிவிலும் பதிவாகும் வாக்குகளைச் சரியாகச் சரிபார்க்க வேண்டும். அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும் வரை கவனக்குறைவாக இருக்கக் கூடாது.

குறைவான வாக்கு வித்தியாசத்தில் நாம் வெற்றி பெறும் தொகுதிகளில், எதிர்க் கட்சியினர் மறு வாக்கு எண்ணிக்கை கோரவோ, வழக்குத் தொடரவோ வாய்ப்புகள் அதிகம். அத்தகைய சூழல்களை எதிர்கொள்ள சட்ட வல்லுநர்களுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

முடிவுகள்வெளியாகும் போது தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்த்து, ஜனநாயக முறைப்படி வெற்றியை உறுதி செய்வதில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்" எனத் தெரிவித்திருக்கிறார்கள். இத்தகவலை தவெக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## திமுக கூட்டணிக்கு சென்னை கோட்டை கி.வீரமணி

சென்னை, ஏப். 28

பிட்டி தியாகராயரின் பிறந்தநாளையொட்டி அவரது உருவப்படத்திற்கு மரியாதை செலுத்த வந்த திராவிடக்கழகத் தலைவர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:



கி.வீரமணியிடம் நடந்து முடிந்த தேர்தலில் த.வெ.கவின் வருகையால் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை இருக்காது என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குதமிழகத்தில் 1971 ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின் போது திமுக 184 இடங்களில் வெற்றி பெற்றது. அப்ப்டி ஒரு வெற்றியை எந்த கட்சியும் இது வரை பெறவில்லை. திமுக ஆட்சிக்கு வராது என ஆரூடம் கணித்தவர்கள் எல்லாம், அடையாளம் தெரியாமல் துண்டைக் காணோம்.. துணியைக்காணோம் என ஓடிவிட்டார்கள்.

அதே நிலைமை மீண்டும் மே 4ஆம் தேதிக்குப் பின் வரும். "திமுக கூட்டணிக்கு சென்னை கோட்டை. மற்ற அணிகளுக்கு மனக் கோட்டை"

இவ்வாறு அவர் பேசியுள்ளார்.

### தனுஷின் 'கர' படத்துக்கு தடை கோரி

## சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு




சென்னை, ஏப். 28

தனுஷ் நடிப்பில் வரும் 30ஆம் தேதி வெளியாகியுள்ள'கர'படத்துக்குத்தடைவிதிக்ககோரிசென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

விக்னேஷ் ராஜா இயக்கியுள்ள கர படத்தில் நடிகர் தனுஷ், மமிதா பைஜு, கே.எஸ். ரவிக்குமார், கருணாஸ், ஜெயராம் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஏப்ரல் 30ஆம் தேதி இப்படம் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்த நிலையில் சென்னை உயர் நீதிமன்றத்தில் சேலம் பூவாய் அம்மன் படத் தயாரிப்பு நிறுவனம் சார்பில் நடிகரும் தயாரிப்பாளருமான வேங்கை அய்யனார் சென்னை வழக்கு ஒன்றை தொடர்ந்துள்ளார்.

அந்த வழக்கில், ஏற்கெனவே கடந்த 2021ஆம் ஆண்டு 'கரா' என்ற தலைப்பில் படப் பெயரை தயாரிப்பாளர் சங்கத்தில் பதிவு செய்து, நடிகர்கள் மாஸ்டர் மகேந்திரன், மொட்டை ராஜேந்திரன் உள்ளிட்ட நடிப்பில் படத்தை தயாரித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

தற்போது தனுஷ் நடித்த 'கர' படத்தின் தலைப்பை மாற்றக் கோரி தயாரிப்பாளர் சங்கத்திலும் முறையிட்டதாகவும், ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தான் பதிவு செய்த பெயரை பயன்படுத்த கூடாது என்றும்தனுஷின்படதலைப்பை 'கர' என்றபெயரை ஆங்கிலத்திலும் பயன்படுத்துவதாக தெரிவித்துள்ளார். இதனால் ரசிகர் மத்தியில் குழப்பம் ஏற்படும் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே 'கர' என்ற நடிகர் தனுஷ் பட தலைப்பை மற்ற வேண்டும் பெயரைமாற்றாமல் படத்தை ரிலீஸ் செய்யக் கூடாது என கேட்டுக் கொண்டுள்ளார். இந்த வழக்கு நாளை (ஏப்.28) விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## செல்வப்பெருந்தகை 'மாற்றம்'... தமிழக காங்கிரஸ் புதிய தலைவர் யார்?

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியான ஓரிரு தினங்களில் தமிழக காங்கிரஸுக்கு புதிய தலைவர் அறிவிக்கப்படுவார் என்கிற தகவல் வெளியாகி யிருப்பதால் சத்தியமூர்த்தி பவன் அனல் தகிக்கிறது. 'தமிழக தேர்தலையொட்டிய செயல்பாடுகளில் செல்வப்பெருந்தகை மீது ராகுல் காந்திக்குத் தனிப்பட்ட முறையில் பெரிய வருத்தம் உண்டு. பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் ராகுல் காந்தியின் பேச்சைத் தவறாக மொழிபெயர்த்தது என செல்வப்பெருந்தகை தொடர்ந்து சர்ச்சைகளில் சிக்கினார். தற்போது தலைவர் பதவியைப் பிடிக்க கார்த்தி சிதம்பரம், ஜோதிமணி, மாணிக்கம் தாகூர், செல்லகுமார், ராஜேஷ்குமார் ஆகியோர் தீவிரமாக முயன்று வருகிறார்கள். முன்னாள் தலைவர்கள் திருநாவுக்கரசர், கே.எஸ் அழகிரி, தங்கபாலு போன்றவர்களும் வாய்ப்பை எதிர்பார்த்து காய் நகர்த்தி வருகிறார்கள். ஆனால். ஏற்கெனவே மாநிலத் தலைவர் பதவியில் இல்லாத புதிய வர்களை நியமிக்கவே டெல்லி தலைமை விரும்புகிறது. போட்டியில் யாருக்கு தலைவர் பதவி கிடைக்குமோ தெரியாது. ஆனால், செல்வப்பெருந்தகையை மாற்றிவிட்டு புதிய தலைவரை நியமிக்க வேண்டும் என்பதில் அகில இந்திய காங்கிரஸ் தலைமை மிகவும் உறுதியாக இருக்கிறது' என்று சத்தியமூர்த்தி பவன் வட்டாரங்கள் தெரிவித்தன.

## விருதுநகர் பட்டாசு ஆலை விபத்து: ரூ.20 லட்சம் இழப்பீடு கோரிய வழக்கு; ஐகோர்ட் கிளை ஒத்திவைப்பு

மதுரை, ஏப். 28

விருதுநகர் பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ரூ.20 லட்சத்திற்கும் குறையாமல் இழப்பீடு வழங்க கோரிய வழக்கை உயர் நீதிமன்றம் ஒத்தி வைத்தது.

விருதுநகரை சேர்ந்த விடியல் வீர பெருமாள் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில்தாக்கல் செய்த மனுவில்: "சிவகாசியில் கடந்த 19ம் தேதி நடைபெற்ற தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு 20 லட்ச ரூபாய்க்கு குறையாமல் இழப்பீடு வழங்க வேண்டும். 50 சதவீதம் தீக்காயம் அடைந்தவர்களுக்கு 15 லட்சம் ரூபாயையும், 25 50 சதவீதம் தீக்காயம் அடைந்தவர்களுக்கு 10 லட்சம் ரூபாயும், 525 சதவீதம் தீக்காயம் அடைந்தவர்களுக்கு 5 லட்சம் ரூபாயும், இழப்பீடாக வழங்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு கல்வி உள்ளிட்ட மறு வாழ்வு வசதிகளை செய்து தரவும், விருதுநகர் பட்டாசு ஆலை விபத்தை தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கவும், விருதுநகர் மாவட்ட பட்டாசு ஆலைகளை குறிப்பிட்ட இடைவெளிகளில் முறையாக ஆய்வு செய்து விதிகள் மீறுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும்." எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதி ராமன் அமர்வு, "ஒரே கோரிக்கைக்காக பல மனுக்கள் தாக்கல்செய்வதுதேவையற்றது.

இது சில நேரங்களில் சிலர் விளம்பரத்திற்காக பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பாகி விடுகிறது என அறிவுறுத்தி, பட்டாசு ஆலை விபத்து தொடர்பான வழக்கோடு இந்த வழக்கையும் சேர்த்து பட்டியலிட உத்தரவிட்டு வழக்கை ஜூன் 8ம் தேதிக்கு ஒத்தி வைத்தனர்.


### தின தமிழ்

**நிருபர்கள் தேவை**

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

**தகுதிகள்**

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701







## "தவெகவின் அமைச்சரவை பட்டியல்... இல்லாத உருட்டு!"

## கொடைக்கானலில் சேகர்பாபு கிண்டல்

திண்டுக்கல், ஏப். 28

"தவெகவின் அமைச்சரவை பட்டியல் என்பது இல்லாத உருட்டு. போகாத ஊருக்கு வழி காண்பிக்கும்" என அமைச்சர் சேகர்பாபு கிண்டல் செய்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வந்துள்ள அமைச்சர் பி.கே.சேகர்பாபு திங்கட்கிழமை (இன்று) தனது குடும்பத்துடன் குறிஞ்சியாண்டவர் கோயில், பூம்பாறை குழந்தை வேலப்பர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "திராவிட மாடல் 2.0 ஆட்சிதான் தமிழகத்தில் மலரும். அதற்கு, மக்களின் முகத்திலேயே தெரியும் மகிழ்ச்சிதான் சாட்சி.

சென்னை எப்போதுமே திமுகவின் கோட்டை தான். 2021 மற்றும் 2024 தேர்தலில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் திமுகவுக்கு கிடைத்தது. கடந்த தேர்தலில் சென்னையில் பதிவான வாக்குகளே 2026 தேர்தலிலும் பதிவாகியுள்ளன.

அரண்டவன் கண்ணுக்கு இருண்டது எல்லாம் பேய் என்ற பழமொழிக்கு எங்களால்தான் வாக்குப் பதிவு அதிகரித்துள்ளது என்று சொல்லும் தவெகவுக்குப் பொருந்தும்.

2021 தேர்தலுக்கு பிறகு 2024 மக்களவைத் தேர்தலுக்காக முதல்வர் ஸ்டாலின் ஆற்றிய களப் பணி வியப்புக்குரியது. அது தேர்தலிலும் எதிரொலித்தது. அதன்பிறகு ஒன்றரை ஆண்டுகளாக 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்காக முதல்வர் ஆற்றிய பணிகள் அளப்பரியது. தேர்தல் திசைக் காட்டியாகஅவர்அளித்த பயிற்சியில் தேர்தல் களத்தில் ராணுவ வீரராக நின்றவர்கள் தற்போது களைப்பாற சுற்றுலா வந்துள்ளனர்.

தவெகவின் அமைச்சரவை பட்டியல் என்பது இல்லாத உருட்டு. போகாத ஊருக்கு வழி காண்பிக்கும்" என்று அவர் தெரிவித்தார்.

# அடுத்த தலைமுறையினருக்கு தாய்மொழிப் பயிற்சி மிகவும் அவசியம்

## மக்கள் சிந்தனை பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன் பேச்சு



ஈரோடு ஏப் 28

தமிழ் இலக்கியக் களம் சார்பில் சிங்கப்பூர் தேசிய நூலக அரங்கில் பாரதிதாசன் விழா நடைபெற்றது. பாவேந்தர் கண்ட கனவு என்ற தலைப்பில் நடந்த இந்தநிகழ்ச்சியில் ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் அப்போது அவர் கூறியதாவது பாரதிதாசன் கண்ட பல கனவுகள் கடைசி வரை நிறைவேறவில்லை. அறிவியல் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டிருந்த பாரதிதாசன் விமானத்தில் ஏறி பயணம் செய்ய வேண்டுமென்று மிகவும் ஆசைப்பட்டிருந்தார். வெளிநாடுகளுக்குச் சென்று அந்நாட்டின் வளர்ச்சியைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினார். 'பாண்டியன் பரிசு என்ற தனது காப்பியத்தையும் மகாகவி பாரதியின் வாழ்க்கை வரலாற்றையும் திரைப்படமாக்கிவிட வேண்டும் என்ற பெரு முயற்சிகளை மேற்கொண்டார். பாரதிதாசனின் இத்தனை கனவுகளுமே கடைசிவரை நிறைவேறாமலேயே போய்விட்டது.

பாண்டியன் பரிசு திரைப்படத்தை சிறப்பாக எடுத்து வெளியிட்டு அதன் மூலம் கிடைக்கும் லாபத்தில் தான் சென்னையில் உலகத்தரம் மிக்க நூலகம் ஒன்றை ஏற்படுத்தப் போவதாகவும் அந்நூலகத்தில் உலக அளவில் தலைசிறந்த அறிவார்ந்த நூல்கள் அத்தனையும் இடம்பெற வேண்டுமென்றும் உலகில் வெளிவந்துள்ள சிறந்த நூல்கள் அனைத்தும் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தார் பாரதிதாசன்.

பாரதிதாசன் தமிழ், தமிழர் என்று மட்டும் அல்லாமல் விரிந்த உலகப் பார்வையோடு ஏராளமான கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். 57 நாடகங்களையும் 11 காப்பியங்களையும் எழுதியுள்ள பாரதிதான் ஒரு தலைசிறந்த கவிஞர் என்பதோடு பன்முகத் தமிழ் ஆளுமையாக விளங்கியவர் போரில்லா உலகை உருவாக்க வேண்டுமென்பதில் மிகவும் உறுதியாக இருந்தவர் பாவேந்தர் மனித நேயம். மானுட ஆற்றல். சகோதரத்துவம், சமத்துவம் உள்ளிட்டவை அவரின் அடிப்படைக் கொள்கைகளாக இருந்துள்ளன.

அடுத்த தலைமுறையினர் தமிழ் மொழியை ஆழ்ந்து கற்க வேண்டும். தமிழை வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளை சுவைத்துப் படிக்கிற பழக்கம் இளைஞர்களிடையே மேலோங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்தவிழாவில் சிங்கப்பூர் தமிழ் இலக்கியக் களம் அமைப்பின் தலைவர் முனைவர் ரத்தின வேங்கடேசன் தலைமையேற்றார். சிங்கப்பூர் நாடாளுமன்ற நியமன உறுப்பினர் தினகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோவுக்கு பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கப்பட்டது.

### உறவுகள் உதவும் கரங்கள் அறக்கட்டளை சார்பில்

# ஏழை எளியவருக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா



இராயகிரி, ஏப். 28

இராயகிரி உறவுகள் உதவும் கரங்கள் அறக்கட்டளை சார்பில் சிந்தாமணி தெலுங்கு யாதவ சமுதாய நலக்கூடத்தில் வைத்து உறவுகள் உதவும் கரங்கள் அறக்கட்டளை பெத்துராஜ் குட்டியான் தலைமையில் நலிந்த உறவுகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது

விழாவில் இயலாதவர்களுக்கு உதவும் அறப்பணி ஆ. தட்சிணாமூர்த்தி பேருஉதவியுடன் உறவுகள் உதவும் கரங்கள் அறக்கட்டளை சார்பில் மங்கையர்களுக்கு சேலை.பெட்ஷீட். மற்றும் அரிசி, மளிகை பொருட்கள் போன்ற உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டது நிகழ்ச்சியில் நிகழ்ச்சியில் சிந்தாமணி தெலுங்கு யாதவர் சமுதாயத்தின் நாட்டாமை

கிருஷ்ணமூர்த்தி, அறக்கட்டளையின் தன்னார்வலர்கள் ராஜகோபால், தங்க மாரியப்பன், சங்கர கோமதி, உஷா, முள்ளிக்குளம் உமா மகேஸ்வரி, வெள்ளத்துரை, கணேசன், உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னனு வாக்கு பதிவு இயந்திரங்கள், கிருஷ்ணகிரி அரசு பல்தொழில்நுட்ப கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளதையடுத்து பாதுகாப்பு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் பர்கூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் .அபிநயா உள்ளார்.

### குமரி கேரளா எல்லை பகுதியில்

# மனைவியை குத்தி கொன்ற கணவன் கைது



களியக்காவிளை, ஏப்.28

களியக்காவிளை அருகே தமிழக கேரளா எல்லை பகுதியான பாறசாலை, விளத்தங்கரை சர்ச் அருகே வசித்து வருபவர் விஷ்ணு (37). டியூசன் ஆசிரியர் . இவரது மனைவி அல்மா (33). இவர்களுக்கு கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்து உள்ளது. இதுவரையிலும் இவர்களுக்கு குழந்தைகள் இல்லை. சமூக வலைத்தளங்களில் அல்மா அதிக நேரத்தை செலவிடுவதால், மனைவி மீது விஷ்ணுவுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனால் கணவன் மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்து உள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் கணவன் மனைவி இடையே ஏற்பட்ட தகராறில் மனைவியை கத்தியால் குத்தி கொலை செய்து விட்டு அருகில் உள்ள சகோதரர் வீட்டில் சென்று சம்பவம் குறித்து விஷ்ணு கூறி உள்ளார். இது குறித்து அக்கம் பக்கத்தினர் கொடுத்த தகவலின் பேரில் பாறசாலை போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று சடலத்தை கைப்பற்றி உடல் கூறு ஆய்விற்காக அனுப்பி வைத்தனர். மேலும் விஷ்ணுவை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



### துறையூர் அருகே

# குடிநீர் வேண்டி சாலை மறியல்

திருச்சி, ஏப். 28

திருச்சி மாவட்டம் துறையூர் அருகே கீரம்பூர் கிராம மக்களுக்கு மூன்று மாதங்களாக குடிநீர் வழங்கப்படவில்லை. இதுகுறித்து புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாததால், ஆத்திரமடைந்த பொதுமக்கள்காலிகுடங்களுடன்துறையூர்பெரம்பலூர் தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

### திருச்சியில் பயங்கர விபத்து

# பேருந்து சக்கரத்தில் சிக்கிய பைக்

திருச்சி, ஏப். 28

திருச்சி கரூர் தேசிய நெடுஞ்சாலையில் பெருகமணி அருகே நேற்று முன்தினம் (ஏப்ரல் 25) தனியார் கல்லூரி பேருந்து, சாலையைகடக்க முயன்ற இருசக்கரவாகனம் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் இருசக்கர வாகனத்தில் சென்ற வாலிபர் தலையில் பலத்த காயங்களுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### நாகர்கோவில் ரயில் நிலையத்தில்

# கட்டண பார்க்கிங்கில் நிறுத்திய வங்கி மேலாளர் பைக் திருட்டு

நாகர்கோவில், ஏப்.28

நாகர்கோவில் வடக்கு சூரங்குடி பகுதியை சேர்ந்தவர் கவியரசன் (36). இவர் கேரள மாநிலம் நெடுமங்காடு பகுதியில் உள்ள வங்கியில் மேலாளராக பணியாற்றி வருகிறார். கடந்த 24ஆம் தேதி கவியரசன் நாகர்கோவில் டவுன் ரயில் நிலையத்தில் உள்ள கட்டண பார்க்கிங் பகுதியில் தனது பைக்கை பார்க்கிங் செய்து விட்டு சென்றுள்ளார். பின்னர் மாலையில் பணி முடித்து பைக்கை எடுக்க வந்தபோது அவரது பைக்கை காணவில்லை. இது குறித்து பார்க்கிங் பணியாளரிடம் கேட்டபோது அலட்சியமாக பதில் கூறியதாக கூறப்படுகிறது. இதனால் கவியரசன் வடசேரி போலீஸ் நிலையத்தில் அடையாளம் தெரியாத நபரால் பைக் திருடப்பட்டதும், தனது வாகனத்தை மீட்டு தர வேண்டும் எனவும், கட்டண பார்க்கிங் பொறுப்பாளர் தகுந்தபதில்அளிக்கவில்லைஎனும்புகாரில்கூறியிருந்தார்.

புகாரின் பேரில் வடசேரி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் குத்தாலிங்கம் விசாரணை நடத்தி பைக் திருட்டு தொடர்பாக வழக்கு பதிவு செய்துள்ளார். மேலும் கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்து வருகிறார்கள்.

நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலையம் மற்றும் டவுன் ரயில் நிலையங்களில் கட்டண வாகன பார்க்கிங் உள்ளது. இந்த பார்க்கிங்கில் போதிய மேற்கூரைவசதிகள்இல்லை. பைக்குகள் பாதுகாப்பில்லாமல் வெயிலில், மழை நேரங்களில் சேதம் அடைந்து வருவதாக புகார் எழுந்துள்ளது. கட்டணம் அதிகமாக வசூலித்தம் கூட பார்க்கிங் மேற்கூரைகள் உள்ளிட்டவை முறையாக அமைக்காதது பயணிகளை பெரும் கவலை அடைய செய்துள்ளது. இது குறித்து ரயில்வே அதிகாரியிடம் புகார் அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற புகார் எழுந்துள்ளது.

இந்த ரயில்வே பார்க்கிங் முறையாக அடையாள எண் அடிப்படையில் இயங்கக்கூடியது. அப்படி இருக்கையில் எப்படி இந்த பைக் திருடப்பட்டது என்பது குறித்து ரயில்வே நிர்வாகமும் முறையாக விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.



### ஈரோடு

# நந்தா கலை அறிவியல் கல்லூரிக்கு மத்திய அரசு ரூ.70 லட்சம் நிதி

ஈரோடு. ஏப்.28

மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரி தொழில்நுட்பவியல் துறையானது பட்டப்படிப்பில்தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் பொருட்டு ஸ்டார் கல்லூரி திட்டத்தை தொடங்கி செயல்படுத்தி வரு கிறது.

இதன் கீழ், சிறந்த ஆய்வகம் மற்றும் வகுப்பு வசதிகள் கொண்ட அறிவியல் கல்லூரியை தேர்ந்தெடுத்து முதல் 3 ஆண்டுகளுக்கு ரூ.70 லட்சம் நிதி ஆதாரத்தை கொடுத்து வருகிறது. அதன்படி வருகிற கல்வி ஆண்டுக்காக ஈரோடு நந்தா கலை அறிவியல் கல்லூரி சிறந்த கல்லூரியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கு செயல்பட்டு வரும் உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் கணினி அறிவியல் துறைகளின் கட்டமைப்பை மேம்படுத்த நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டமானது, பேராசிரியர்கள், மாணவர்களின் ஆராய்ச்சியை ஊக்குவித்தல், தொழிற்துறைகளை மேம்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபடும் ஆர்வத்தை தூண்டுகிறது. நிதி உதவி பெறுவதற்கு, உறுதுணையாக செயல்புரிந்த கல்லூரி முதல்வர் மனோகரன், உயிர் தொழில்நுட்பவியல் துறைத்தலைவர் பரிமளம் நுட்பவியல் துறைத்தலைவர் அப்துல், கணினி அறிவியல் மற்றும் மாணவர்களுக்கு நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் சண்முகன்,

அங் கத்தினர் பானுமதி சண்மு கன், இணை நிர்வாக அறங் காவலர்கள் நந்தகுமார் பிரதீப், திருமூர்த்தி, நிர் வாகஅலுவலர் ஸ்ரீனிவா சன் ஆகியோர் வாழ்த்துகள் தெரிவித்தனர்.

### நாகர்கோவிலில்

# ரூ. 3.49 கோடியில் உருவாக்கப்பட்ட கோளரங்கம் மூடிக்கிடக்கும் அவலம்

## கோடை விடுமுறையில் திறக்க கோரிக்கை



நாகர்கோவில், ஏப்.28

நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான சர்.சி.பி. ராமசாமி ஐயர் நினைவு பூங்கா பாரம்பரியம் மிக்க பூங்காவாகும். நகரின் மைய பகுதியில் உள்ளதால் நாள்தோறும் ஏராளமான பொதுமக்கள், குழந்தைகள் வந்து செல்கிறார்கள். இந்நிலையில், இங்கு நவீன கருவிகளுடன் கூடிய அறிவியல் அரங்குகள் கொண்ட அறிவியல் பூங்கா அமைக்க மாநகராட்சி நடவடிக்கை மேற்கொண்டது.

இதன்படி, கோளரங்கம், நியூட்டனின் 3ம் விதி உள்ளிட்டவற்றை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அறிவியல் அரங்கம், ரூ.3.49 கோடியில் அமைக்கும் பணிகள் கடந்த ஆண்டு தொடங்கியது. 4 கே தரத்தில் அறிவியல் மற்றும் வானவியல் தொடர்பான ஒலி, ஒளி காட்சி ஒளிபரப்பு செய்யும் வசதிகள் உள்ளன. இதை பார்ப்பதற்காக 40 இருக்கைகளுடன் ஏ.சி. வசதியுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அறிவியல் தொழில் நுட்பம், பொறியியல், கணிதம் ஆகிய நுட்பங்களை செய்முறை மூலம் கற்றுக் கொள்ளும் வகையில் அறிவியல் சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பணிகள் எல்லாம் முடிவடைந்துள்ளன. ஆனாலும் தற்போது வரை கோளரங்கம் திறக்கப்பட வில்லை.

கோளரங்கத்தை சுற்றி பல்வேறு அறிவியல் உபகரணங்கள் உள்ளன. இதற்கான விளக்கம் தமிழ், ஆங்கிலத்தில் உள்ளன. இவற்றில் சில கருவிகள் செயல்படாமல் உள்ளன. மேலும் ஒட்டப்பட்டுள்ள அறிவிப்பு பலகை சரியாக பராமரிப்பு இல்லாமல் உள்ளது. மழையில் நனைந்து சேதமடையும் வகையில் உள்ளது. அறிவியல் மையம் என மாணவ, மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடன் வருகிறார்கள். ஆனால் இதன் செயல்பாடுகளைவிளக்கி கூறவோ, உபகரணங்களை செயல்படுத்தி காட்டவோ பணியாளர்கள் யாரும் இல்லை. இதனால் குழந்தைகள் ஏமாற்றம் அடைகிறார்கள்.

தற்போது கோடை வெயில் வாட்டி வதைப்பதுடன், கோடை விடுமுறை காலமும் என்பதால் குடும்பம், குடும்பமாக வருபவர்கள் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. இதில் குழந்தைகள் ஆர்வமுடன் வந்து அறிவியல் உபகரணங்களை இயக்கி பார்த்து ஏமாற்றம் அடைகிறார்கள்.

எனவே உடனடியாக மாநகராட்சி நிர்வாகம் இந்த கோளரங்கத்தை செயல்பாட்டுக் கொண்டு வர வேண்டும். கோடை விடுமுறையில் இதை செயல்படுத்தினால், அதிகளவில் மாணவ, மாணவிகள் வருவார்கள் என கோரிக்கையும் எழுந்துள்ளது.

மாநகராட்சி அதிகாரிகளிடம் கேட்ட போது, ஏற்கனவே கோளரங்கத்தில் பணிகள் முடிவடைந்து சோதனை முடிந்துள்ளது. இதை இந்த வார இறுதிக்குள் திறக்க ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார் என்றனர்.

### திருச்சி மத்திய சிறையில்

# ஆயுள் தண்டனை கைதி உயிரிழப்பு

திருச்சி, ஏப். 28

திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த அரியலூரைச் சேர்ந்த ஆயுள் தண்டனை கைதி வீ.செந்தில் (46) உடல் நலக்குறைவால் வெள்ளிக்கிழமை இரவு உயிரிழந்தார். வயிற்று வலி மற்றும் உடல் சோர்வு காரணமாக அவர் திருச்சி அரசுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இது தொடர்பாக சிறை அதிகாரிகள் அளித்த புகாரின் பேரில், அரசு மருத்துவமனை போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். செந்தில் 2002 செப்டம்பர் 22 முதல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

காப்புக்காட்டில்

# மே 1ல் தொல்காப்பியர் பிறந்த தின விழா

## மதுரை நீதிமன்ற கிளை நீதியரசர் விக்டோரியா கௌரி பங்கேற்பு



மார்த்தாண்டம், ஏப்.28

தமிழ் பெரும் புலவர் தொல்காப்பியரின் 2,737 வது பிறந்த தினவிழா மே 1 ல் காப்புக்காட்டில் நடைபெறுகிறது. காலை 7 மணிக்கு தொல்காப்பிய பாராயணத்துடன் விழா தொடங்குகிறது. காலை 9 மணிக்கு தமிழ்நாடு அரசு மற்றும் தொல்காப்பியர் அறக்கட்டளை சார்பில் தொல்காப்பியர்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. தொடர்ந்து பள்ளி, கல்லூரி மாணவ மாணவியருக்கான கலை இலக்கியப் போட்டிகள் நடைபெறுகிறது.

இப்போட்டிகளைதமிழ் வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர் போது மணி தொடங்கி வைக்கிறார். கே.ஜி. முதல் 2 ம் வகுப்பு வரை ஓவியப் போட்டிக்கான தலைப்பு 'இந்திய தேசியக் கொடி', 3 முதல் 5ம் வகுப்பு வரை ஓவியப் போட்டிக்கான தலைப்பு 'காப்புக்காடு தொல்காப்பியர் சிலை', 6 முதல் 8ம் வகுப்பு வரை பேச்சுப் போட்டிக்கான தலைப்பு 'தொல்காப்பியத்தில் அறிவியல்', 9 முதல் 10ம் வகுப்பு வரை கட்டுரைப் போட்டிக்கான தலைப்பு 'எழுத்துப் பிறப்பில் தொல்காப்பியம்', 11 முதல் 12ம் வகுப்பு வரை கட்டுரைப் போட்டிக்கான தலைப்பு 'தொல்காப்பியம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்', கல்லூரிநிலைக்கான பேச்சுப்போட்டிதலைப்பு 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர்' மற்றும் அனைவருக்கும் பொதுவாக 'தொல்காப்பியம்' என்னும் தலைப்பில் வினாடி வினாப் போட்டியும் நடைபெற விருக்கிறது.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் விருது வழங்கும் விழாவுக்கு அறக்கட்டளை தலைவர் பாஸ்கரன் தலைமை தாங்குகிறார். உயர் நீதிமன்ற மதுரை கிளையின் நீதியரசர் விக்டோரியா கௌரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தமிழறிஞர்கள் இர. தேன்மொழி, அனைத்திந்தியத் தமிழ்ச் சங்கப் பேரவை இணைச் செயலாளர் மற்றும் முனைவர் சு. தாமரைப் பாண்டியன், முதுநிலை ஆராய்ச்சியாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியோருக்கு தொல்காப்பியர் அறக்கட்டளை விருதினை வழங்குகிறார்கள். வீரமாமுனிவர் பேச்சாளர் பேரவை தலைவர் ஆன்றோ சிறப்புரை வழங்குகிறார்.துத்துக்குடி துறைமுகக் கழக பொறுப்பாளர் கேப்டன் பென்னட் சிங் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசுகள் வழங்குகிறார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தமிழ் வளர்ச்சித் துறையும், தொல்காப்பியர் அறக்கட்டளையும் இணைந்து செய்து வருகிறது.

திருப்பூர் நகரில்

# கரூர் வைஸ்யா வங்கியின் புதிய கோட்ட அலுவலகம் தொடக்கம்



திருப்பூர், ஏப்ரல் 28

இந்தியாவின் தனியார் துறை வங்கிகளுள் செழுமையான பாரம்பரியத்தையும், சிறப்பான செயல்பாட்டையும் கொண்டிருக்கும் கரூர் வைஸ்யா வங்கி (KVB), திருப்பூர் மாநகரில் தனது புதிய கோட்ட அலுவலகத்தைஇன்றுதிறந்துள்ளது. வங்கியின் நிர்வாக பணிகளையும் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்கும் செயல்பாடுகளையும் மேலும் சிறப்பாகவும், துரிதமாகவும் வழங்க வேண்டுமென்ற குறிக்கோளின் அடிப்படையில் இந்த கோட்ட அலுவலகத்தை இவ்வங்கி நிறுவியிரு க்கிறது. "இந்தியாவின் பின்னலாடை ந கரம்" என்று அழைக்கப்படும் திருப்பூரின் தொழில் வளர்ச்சிக்கு இவ்வங்கி அளிக்கும் முக்கியத்துவத்தை இந்த முக்கியமான நடவடிக்கை பிரதிபலிக்கிறது. இதன் மூலம் உள்ளூர் அளவிலேயே கடனுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரமும், மூத்த அதிகாரிகளின் அணுகலும் இப்பிராந்தியத்தைச் சேர்ந்த மக்களுக்கும், தொழில்துறை நிறுவனங்களுக்கும் எளிதாக கிடைப்பதை இவ்வங்கி இந்நடவடிக்கையின் மூலம் உறுதி செய்திருக்கிறது.

திருப்பூரின் வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்ப திட்டமிட்டு அதனை நிறைவேற்றும் நோக்கத்தோடு இந்த புதிய கோட்ட அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது, திருப்பூர் மண்டலத்தில் கரூர் வைஸ்யா வங்கி 37 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. ஜவுளி மற்றும் பின்னலாடைகள் ஏற்றுமதியில் உலக அளவில் சிறந்து விளங்கும் திருப்பூர் மாநகரில், ஆயிரக்கணக்கான சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) உள்ளன. இவைகளுக்கு விரைவாக கடன்/நிதி வசதிகளும், சிறந்த நிதி ஆலோசனைகளும் தேவைப்படுகின்றன. இந்த புதிய கோட்ட அலுவலகம் திறக்கப்பட்டிருப்பதால் வங்கியின் மூத்த அதிகாரிகளும் நிதித்துறை நிபுணர்களும் உள்ளூர் அளவிலேயே பணியாற்றி துரிதமான சேவையை வழங்குவதால், உள்ளூர் தொழில் முனைவோர், ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஆடை உற்பத்தியாளர்களுக்கு மிக விரைவாக வணிகக் கடன்களும் நிதி சேவைகளும் கிடைக்கும்.

கோட்ட அலுவலகத்தின் திறப்பு விழாவில், கரூர் வைஸ்யா வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரி திரு. ரமேஷ் பாபு பேசுகையில், "இந்தியாவின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் திருப்பூர் பிராந்தியம் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. எங்கள் வங்கியின் புதிய கோட்ட அலுவலகத்தை தொடங்கியிருப்பதன் மூலம், நிர்வாகப் பணிகள் மற்றும் கடன்களுக்கு ஒப்புதல் வழங்கும் அதிகாரம் பெற்ற குழுக்களை வாடிக்கையாளர்களுக்கு மிக அருகில் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இதன் மூலம் கடன் விண்ணப்பங்கள் மிக விரைவாகப் பரிசீலிக்கப்பட்டு, ஒப்புதல்கள் வழங்கப்படும். மேலும், உள்ளூர்தொழில்நிறுவனங்கள் உலக அளவில் பிற நாடுகளோடு போட்டிபோடவும், மேலும் வளர்ச்சி அடையவும் தேவையான சிறப்பான நிதி சேவைகள் உடனடியாக கிடைக்கும்" என்று கூறினார்.

பாரம்பரிய வங்கி சேவையின் நம்பகத்தன்மைக்கும் மற்றும் நவீன யுகத்தில் வேகமான வணிக செயல்பாடுகளுக்கு இடையிலுள்ள இடைவெளியைக் குறைக்கும் பணியை இந்த புதிய அலுவலகத்தின் மூலம் கரூர் வைஸ்யா வங்கி தொடர்ந்து வழங்கும். 110 ஆண்டு கால பாரம்பரியம் கொண்ட வங்கியின் இந்த புதிய அலுவலகத்தின் மூலம், இப்பகுதியின் வணிகர்களும், தொழில்நிறுவனங்களும், கார்ப்பரேட் நிறுவனங்கள், சிறுநடுத்தர தொழில் நிறுவனங்கள்) மற்றும் வர்த்தக நிதிச் சேவைகளின் விரிவான தொகுப்பை மிக எளிதாகவும், விரைவாகவும் பெற்று பயனடைய முடியும்.

கரூர் வைஸ்யா வங்கி பற்றி: 1916ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கரூர் வைஸ்யா வங்கி, இந்தியாவின் முன்னணி தனியார் வங்கிகளில் ஒன்றாகும். இந்த வங்கிக்கு நாடு முழுவதும் 902 கிளைகளும், 2,228க்கும் மேற்பட்ட ஏடிஎம் மற்றும் பணம் செலுத்தும் இயந்திரங்களும் உள்ளன. 31.12.2025 நிலவரப்படி, இவ்வங்கியின் மொத்த வர்த்தகம் ரூ. 2,11,647 கோடி என்ற அளவில் இருந்தது. இதில் வைப்புத்தொகை ரூ. 1,14,595 கோடி, மற்றும் வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 97,052 கோடி என்ற அளவில் இருந்தன. 2026 ஆம் நிதியாண்டின் 3வது காலாண்டில் வங்கியின் நிகர லாபம் ரூ. 690 கோடியாகவும், நிகர வாராக்கடன் 0.19% ஆகவும் உள்ளது.





கிருஷ்ணகிரிமாவட்டஆட்சியர்அலுவலககூட்டரங்கில்,மக்கள்தொகைகணக்கெடுப்பு குறித்து இரண்டு நாள் பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் துவக்கி வைத்து உரையாற்றினார். உடன் மக்கள் தொகை கணக்கெடுப்பு இணை இயக்குநர் .ஆர்,வாசுதேவன், உதவி இயக்குநர் .எஸ்.சஜிலால், புள்ளியியல் ஆய்வாளர் .கட்டவெங்கண்ணா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது .எஸ்.கிருஷ்ணன் மற்றும் பேரிடர் மேலாண்மை வட்டாட்சியர் .ஜி.வெங்கடேசன் ஆகியோர் உள்ளனர்.



நாகர்கோவில் ரயில் நிலையத்தில்

# பயணிகள் ஏறும் முன் புறப்பட்ட ரயில் பயணிகள் தடுத்து நிறுத்தி திடீர் போராட்டம்

நாகர்கோவில், ஏப். 28

கன்னியாகுமரி ரயில் நிலையத்திலிருந்து சென்னை சென்ட்ரலுக்கு ஞாயிற்றுக்கிழமை தோறும் வாராந்திர ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயில் கன்னியாகுமரியில் இருந்து இரவு 8.30க்கு புறப்பட்டு நாகர்கோவில் திருநெல்வேலி கோவில் பட்டி . மதுரை, சேலம், பெரம்பூர் வழியாக சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் சென்றடையும். நேற்று முன்தினம் இரவும் வழக்கம் போல் இரவு 8 36 மணியளவில் இந்த ரயில் கன்னியாகுமரியில் இருந்து புறப்பட்டது.

ஏற்கனவே தேர்தலுக்காக வாக்களிக்க வந்தவர்கள், விடுமுறைகள் முடிந்து சென்னை உள்ளிட்ட இடங்களுக்கு செல்ல இந்த ரயிலுக்காக நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலையத்தில் காத்திருந்தனர். பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள் என நூற்றுக்கணக்கான பயணிகள் காத்திருந்தனர். வழக்கமாக இந்த ரயில் நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலையத்தில் 1வது பிளாட்பாரத்தில் தான் வந்து நிற்கும். ஆனால் நேற்று முன்தினம் இந்த ரயில் இரவு 8. 50 மணியளவில் 2வது பிளாட்பாரத்திற்கு வந்தது.

ஆனால் பெட்டிகளில் கதவு திறக்கப் படாததால் பயணிகள் ரயிலில் ஏற மிகுந்த சிரமப்பட்டு கொண்டிருந்தனர். வழக்கமாக ஐந்து நிமிடங்கள் நிறுத்தப்படும் இந்த ரயில் அன்று 3 நிமிடத்தில் புறப்பட்டது. இதனால் அங்கிருந்த பயணிகள் அதிர்ச்சி அடைந்தனர். நூற்றுக்கணக்கான பயணிகள் ரயிலில் ஏற முடியாமல் தவித்த நிலையில், ரயில் புறப்பட்டதால் பயணிகள் செய்வதறியாமல் திகைத்தனர்.

இதற்கிடையில் ஒரு சிலர் ரயிலில் சங்கிலியை பிடித்து நிறுத்தினார். தொடர்ந்து ரயில் புறப்படாமல் நிறுத்தப்பட்டது. சில பயணிகள் ரயில் முன்பு அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் ரயில் நிலைய அதிகாரிகள் வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். அவர்கள் கூறுகையில் வழக்கமாக ரயில் சுத்தம் செய்து முடித்து கிளம்பும்போது ரயில் பெட்டிகளை பரிசோதனை செய்து கதவுகளை முறையாக திறந்து வைக்க வேண்டும். ஆனால் நேற்று முன்தினம் ரயில் கதவுகளை திறக்காததால் பயணிகள் ஏற முடியவில்லை. இந்த பிரச்சனை இனி நடக்காமல் பார்த்துக் கொள்கிறோம் என அதிகாரிகள் கூறினார்கள். இதை அடுத்து பயணிகள் போராட்டத்தை கைவிட்டு ரயிலில் ஏறினார்கள். இந்த சம்பவத்தால் சுமார் ஒரு மணி நேரம் தாமதமாக இந்த ரயில் புறப்பட்டு சென்றது.

களியக்காவிளை அருகே

# ஆடிட்டர் வீட்டில் நகை திருடிய கொள்ளையன் கைது

களியக்காவிளை, ஏப்.28

களியக்காவிளை அருகே திருத்துவபுரம் பகுதியை சார்ந்தவர் அலேக்கேஸ் மகன் மரிய பெனடிக்டர். இவர் ஆடிட்டராக பணி புரிந்து வருகிறார். கடந்த ஏப்ரல் 4ம் தேதி ஈஸ்டர் பண்டிகையையொட்டி இவர் குடும்பத்தாருடன் இரவு சர்ச்சுக்கு சென்றுள்ளனர். அப்போது திருடன் விட்டின் கதவினை உடைத்து வீட்டில் இருந்த நகைகளை திருடிச் சென்றுள்ளார். இது குறித்து மரிய பெனடிக்டர் களியக்காவிளை போலீசில் புகார் செய்துள்ளார். போலீசார் வழக்கு பதிவு செய்த திருடனை தேடி வர்தனர்.

இந்நிலையில் கேரளா மாநிலம் கொல்லம் மாவட்டம் கொட்டாரக்கரை தாலுகா பகுதியை சார்ந்த சுனில்குமார் மகன் ஆல்பிராஜ் (33) என்பவரை களியக்காவிளை எஸ். ஜமகேந்த்தலைமையிலான



போலீசார் கேரளா சென்று பிடித்து விசாரணை நடத்தினர். பின்னர் அவரிடம் இருந்த 20 சரவன் நகைகளை போலீசார் மீட்டுள்ளனர். அவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

தருமபுரி மாவட்டத்தில்

# பொதுமக்கள் வெப்ப அலை காரணத்தால் மதிய நேரத்தில் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும் ஆட்சியர் சதீஷ் அறிவுறுத்தல்



தருமபுரி ஏப்ரல் 28

தருமபுரி மாவட்டத்தில் கொடை வெயிலின் தாக்கத்தால் வெப்பஅலை ஏற்படும் மதிய நேரத்தில் பொதுமக்கள்வெளியில்செல்வதைதவிர்க்கவேண்டும் என ஆட்சியர் அறிவுறுத்தியுள்ளார். தருமபுரி மாவட்டத்தில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. மதியம் 12 மணி முதல் 3 மணி வரை வெப்பஅலைஉச்சத்தில்இருக்கும்போதுவெப்பஅலை ஏற்படுகிறது. இதனால் இந்த நேரத்தில் பொதுமக்கள் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும். தாகம் இல்லாவிட்டாலும்நிறையதண்ணீர்குடிக்கவேண்டும். வீடுகளில் சூரிய ஒளி மறைப்புகள் மற்றும் பிரதிபலிப்பான்களை பயன்படுத்தி காற்றோட்டமாகவும் குளிர்ச்சியாகவும் வைத்திருக்க வேண்டும். ஓ ஆர் எஸ் குடிநீர் மற்றும் அத்தியாவாசிய மருந்துகள் வீட்டில் வைத்திருக்க வேண்டும். கோடை காலத்தில் வெளிர் நிறத்தில் தளர்வான பருத்தி ஆடைகளை அணிய வேண்டும். வயதானவர்கள், கர்ப்பிணி பெண்கள், சிறு குழந்தைகள் மற்றும் நாள்பட்ட நோய்கள் உள்ளவர்கள் வெயில் அதிகம் உள்ள நேரத்தில் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும் .இலைகள் குப்பை அல்லது விவசாயக் கழிவுகள் எரிப்பதை தவிர்த்து வீடுகள், மொட்டை மாடிகளில் செடிகள், மரங்கள் வளர்த்து பசுமை சூழல் நிறைந்த இடமாக பராமரிக்க வேண்டும் .வெயில் அதிகம் உள்ள நேரத்தில் நீர் ,மோர், இளநீர், எலுமிச்சைச்சாறு ஆகியவற்றை குடிக்க வேண்டும். வெயிலில் செல்லும் போது தொப்பி, குடை ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும். கோடைகாலத்தில் நீண்ட நேரம் நடை பயிற்சி சூரிய ஒளியின் உடற்பயிற்சி ஆகியவற்றை தவிர்க்க வேண்டும். எளிதில் ஜீரணிக்ககூடிய உணவுகளை சாப்பிட வேண்டும். மது உள்பட நிரிழப்பு ஏற்படுத்தும் பானங்களை தவிர்க்க வேண்டும் இவ்வாறு ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

பென்னாகரத்தில்

# உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் ஆய்வு

## விதிமீறிய கடைகளுக்கு அபராதம்

தருமபுரி ஏப்ரல் 28

தருமபுரி மாவட்டத்திற்கு உட்பட்ட பென்னாகரம் பேருந்து நிலையம் , வட்டார வளர்ச்சி அலுவலகம் பகுதியில் உள்ள பழச்சாறு விற்பனை கடைகள், ஐஸ்கிரீம்தயாரிப்புநிறுவனங்களில்உணவுபாதுகாப்புத் துறை பென்னாகரம் வட்ட அலுவலர் நந்தகோபால் உள்ளிட்ட அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போதுஉணவுப்பொருட்களில்பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் சேர்மானங்கள், சர்க்கரை, தயாரிப்பு தேதி ,சுகாதாரம் உணவு பாதுகாப்பு உரிமைகள் உள்ளிட்ட விவரங்களை ஆய்வு செய்தனர். இதில் விதிமுறைகளை முறையாக பின்பற்றாத இரண்டு பழக்கடை உரிமையாளர்களுக்கு தலா ரூ. 1,000 விதம் , ரூ. 2,000 அபராதம் விதித்தனார். மேலும் மாம்பழம் வரத்து தொடங்க உள்ளதால் செயற்கை முறைகளில் பழங்களை பழுக்க வைத்து விற்பனை செய்யக்கூடாது. உணவு பாதுகாப்பு துறையின் விதிமுறைகளை முறையாக பின்பற்ற கடைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளனர்.

கே . ஈச்சம்பாடியில்

# வாக்குப்பதிவு எந்திரங்களை எடுத்துச் செல்லும்போது வாகனங்களை மறித்து சாலை மறியல்

## 28 பேர் மீது வழக்குப் பதிவு

தருமபுரி ஏப்ரல் 28

தருமபுரி மாவட்டம் அரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கே. ஈச்சம்பாடி கிராமத்தில் செயல்பட்டு வரும் அரசு உயர்நிலைப் பள்ளியை இடமாற்றம் செய்யக்கூடாது என வலியுறுத்தி வாக்காளர்கள் மற்றும் பொதுமக்கள் தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இந்த நிலையில் வாக்குப்பதிவு அன்று தேர்தல் அதிகாரிகளை பணி செய்ய விடாமல் தடுத்தும், வாக்கு பெட்டிகளை எடுத்துச் செல்லும் வாகனங்களை தடுத்தும் சாலை மறியல் நடந்தது.

இந்த மறியல் போராட்டம் தொடர்பாக கே. ஈச்சம்பாடி பகுதியை சேர்ந்த மூர்த்தி, தினேஷ்குமார், பார்த்திபன், நந்தகுமார், ராணி, ஆர்த்தி, சுகுணா, லாவண்யா, புவனேஸ்வரி, சுதா, லதா உள்பட 28 பேர் மீது கம்பைநல்லூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



## தஞ்சாவூர்

# அருள்மிகு பிரகதீஸ்வரர் கோயில் சித்திரை பெருவிழா திருத்தேரோட்டம்

தஞ்சாவூர் ஏப்ரல் 28

தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீஸ்வரர் கோயில் பெரிய கோயில் சித்திரை பெருவிழா திரு தேரோட்டத்தினை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தொடங்கி வைத்தார் நிகழ்வில் தஞ்சாவூர் மாவட்ட காவல் கண் காணிப்பாளர் ஏ சுந்தர வதனம் வருவாய் கோட்டாட்சி யர் நித்யா ,பரம்பரை அறங்காவலர் பாபாஜி ராஜா போன்சிலே வட்டாட்சியர் சிவகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

## தஞ்சாவூர்

# நாயக்கர் கால காசுகளில் பெரிய கோயில் தேர் சின்னம்



தஞ்சாவூர் ஏப்ரல் 28

தஞ்சாவூர் நாயக்கர் ஆட்சி காலத் தில் வெளியிடப்பட்ட காசுகளில் தஞ்சாவூர் பெரிய கோவில் தேர் சின்னம் பொறிக்கப் பட்டுள்ளது என்று தஞ்சாவூரை சேர்ந்த நாணயவியல் ஆராய்ச்சியாளர் ஆறுமுக .சீதாராமன் கூறினார்

இது குறித்து மேலும் அவர் கூறியதாவது

தமிழக தேர்கள் எல்லாம் திராவிட பாணி அமைப் பில்தான் இருக்கும் திருத்தேர்கள் பற்றி கல்வெட்டுகள், சிற்பங்கள், ஓவியங்கள், இலக்கி யங்களைத் தவிர காசு களிலும் தேர் சின்னம் குறித்து மன்னர்கள் வெளியிட் டுள்ளனர் .இந்த காசுகள் அனைத்தும் கோவில் தேர் திருவி ழாவை சிறப்பிக்கும் வகையில் திருவிழா அன்று வெளியிடப்பட்டி ருக்கலாம்

பெரும்பாலும் விஜய நகர ஆட்சியின் கீழ் நாயக்கர் மன்னர் கள் அதிகமாக திருத்தேர் வடிவங் களை பல வகையான காசுகளில் பொரித்து வெளியிட்டுள்ளனர் மேலும் சோழ மண்டலத்தில் கிடைத்துள்ள தேர்சின் னம் பொறி த்த இருவகையான காசுகள் உள்ளன

தஞ்சாவூரில் கண்டெடுக்கப்பட்ட இந்த இரண்டு வகை காசுகளிலும் உள்ள தேர் சின்னங்கள் தஞ்சாவூர் நாயக்கர் காலத்தில் சார்ந்தவை. இந்த இரு காசுகளும் இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டதால், இவற்றில் பொறிக்கப்பட்டுள்ள தேர் தஞ்சாவூ ர் பெரிய கோவில் தேர்களாக கருதப்படுகிறது இதில் ஒரு காசில் முன் பக்கத்தில் வலது பக்கம் நோக்கி அமர்ந்திருக் கும் காளை உருவம் உள்ளது. காளையின் மேல் சூரியன் சந் திரன் உருவம் காணப்படுகின்றன பின்பக்கத்தில் தேர் உள்ளது செப்பு உலோகத்தால் செய்யப்பட்ட அந்த காசின் எடை 2.3 கிராம் மற்றொரு காற்றில் முன் பக் கத் தில் கணபதி அமர்ந்துள்ளார். பின்பக்கத்தில் தேர் காணப்படுகிறது இதுவும் செம்பு உலோகத்தில் செய் யப்பட்டுள்ளது. இதன் எடை 0.64 கிராம் என்றார்

**ஆவணம் காணவில்லை**

எனது கட்சிக்காரர் FED BANK FINANCIAL SERVICES LIMITED அலுவலகம் .160,162,164 RAJESHWARY COMPLEX VADASERY NAGERCOILKANNIYAKUMARI629001.கன்னியாகுமரிதமிழ்நாடு என்ற முகவரியில் உள்ளது. திரு.கிறிஸ்துதாஸ் த/பெ . வறுவேல் D.NO 2/90, மச்சுவிளை , மேக்கோடு, கன்னியாகுமரி 629177, அவருடைய அசல் தாய் பத்திரமான கிரைய பத்திரம் வேர்கிளம்பி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண் 324/1990 ஆவண பதிவு செய்த நாள் 27/02/1990 அசல் ஆவணம் கடந்த 05/02/2020 தேதியில் மாலை சுமார் 4.00 மணியளவில் பேருந்து நிலையத்திலிருந்து திருவட்டாறு எடுத்து செல்லும் போது தொலைந்து விட்டது. பல இடங்களி'ல் தேடியும் கிடைக்கவில்லை. எனவே பொதுமக்கள் மேற்படி ஆவணத்தை யாரிடமோ கிடைக்க பெற்றாலோ மற்றும் மறுப்பு தெரிவிக்க வேண்டும் என்றாலே 7 நாட்களுக்குள் எமது கீழ் கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்

CONTACT
S.SOUNDAPPAN B.A,B.L,C.D.T
D.NO.9A 1ST FLOOR NALLATHAMBI STREET PALAYAMKOTTAI
THIRUNELVELI 627002
CRN: CRR24035291




## திருப்பூர் அரசு ஆஸ்பத்திரியில்

# 20 படுக்கைகளுடன் வெப்ப அலை சிகிச்சை பிரிவு தயார்

திருப்பூர், ஏப்.28

கோடை வெப்பத்தால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிக்க வசதியாக திருப்பூர் அரசு ஆஸ் பத்திரியில் சிறப்பு வார்டு தொடங்கப்பட் டுள்ளது.

சிறப்பு வார்டு

கோடை வெயிலின் தாக்கம் வழக்கத்தை விட அதிகமாகஉள்ளது.கடந்த ஒருவாரமாக 100 டிகிரியை தாண்டி வெயில் கொளுத்தி வருகிறது.

இந்த வெயிலின் தாக் கம் காரணமாக உடலின் வெப்ப நிலை அதிகமாக உயருவது, வியர்வை வராமல் தோல் வறண்டு சிவந்து போவது, கடுமையான தலைவலி மற்றும் மயக்கம், குமட்டல் அல் லது வாந்தி எடுத்தல், இத யத்துடிப்பு அல்லது பேச்சு உளறல் போன்ற அறிகுறி ஏற்படும் என டாக்டர் தெரிவித்துள்ளனர். திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 20 படுக் கைகளுடன்கூடியவெப்ப அலை சிகிச்சை பிரிவு தொடங்கப்பட்டுள் ளது.

இதுகுறித்து டாக்டர்கள் கூறியதாவது:

வெயிலின் கொடுமையால் மக்களுக்கு உடலில் நீர்ச்சத்து குறைந்து, மயக் கம், சோர்வு போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். அவ்வாறு பாதிக்கப் பட்டு சிகிச்சை பெறவருவோருக்கு சிகிச்சை அளிக்கவசதியாக 24 மணி நேரமும் செயல்படும் வகையில் தனிப்பிரிவு உருவாக்க ப் பட்டுள்ளது

இங்குதடையற்ற ஆக்சிஜன் வசதி, குளுக்கோஸ் ஏற்றும் வசதி, தேவையான மருந்துகள் கையிருப்பில் உள்ளன. வெப்ப அலை காற்று வீசுவதால் அதிக வியர்வை ஏற்ப டும்போது தோல் மூலம் நீர்ச் சத்து இழப்பு ஏற்படுகிறது. இதன்காரணமாக கிட்னி பாதிக்கப்படும்.

வெளியே போகாதீர்கள்

அடுத்தகட்டமாக இத யம் பாதிக்கப்பட்டு உயிரிழக்கும் அபாயம் கூட ஏற் படவாய்ப் புள்ளது. இதை தவிர்க்க மதியம் வெயிலில் செல் லாமல்12 மணி முதல் மாலை 4 வரை வெளியில் செல்வதைதவிர்க்க வேண்டும்

முதியவர்கள், குழந்தைகள் வெளியே செல்வதை தவிர்ப் பது நல்லது.

மெல்லிய, உளர் ஆடைகள் அணியலாம். வெள்ளை நிற பருத்தி ஆடைகளைஆடைகளை அணியலாம் கருப்பு நிற ஆடைகளை தவிர்க்க வேண்டும். வெளியே செல்லும் போது குடை, தொப்பி அல்லது தலைக்கவசம் பயன்படுத் துவது மிகவும் அவசியம்.

கண்களுக்கு தரமான குளிர் கண்ணாடி அணியலாம். தாகம் எடுத்தால் தண்ணீர்குடிக்க வேண்டும். இளநீர், தர்பூசணி, மோர், கம்பங் கூழ் போன்ற இயற்கை பானங்களை அருந்துவது உடல் வெப் பத்தை குறைக்க உதவும். மயக்கம் அல்லது அதீத சோர்வு ஏற்பட்டால் உட னடியாக டாக்டரை தொடர்பு கொள்ள வேண் டும். மயக்கமடைந்தவர்க ளைகுளிர்ந்த இடத்துக்கு உடனடியாக மாற்ற வேண்டும். இவ்வாறு மருத்துவர்கள் கூறினார்.



## கேரளாவில்

# பிரசித்திப்பெற்ற எடத்துவா புனித ஜார்ஜியார் திருத்தல பெருவிழா

### திருக்கொடி ஏற்றத்துடன் தொடங்கியது

களியக்காவிளை, ஏப்.28

கேரள மாநிலம் ஆலப் புழை மாவட்டத்தில் எடத்துவா பகுதியில் புனித ஜார்ஜியார் திருத்த லம் அமைந்துள்ளது. மிக வும் பிரசித்திப்பெற்ற இந்த எடத்துவா புனித ஜார்ஜியார் திருத்தலத்திற்கும் தமிழ கத்திற்கும் நீண்டகால தொடர்பு உள்ளது. தமிழ கத்தின் பல்வேறு பகுதிக ளில் இருந்து வணிகம் போன்றபல்வேறுதேவை களுக்காக ஆலப்புழை மாவட்டத்திற்கு சென்று வந்த பொதுமக்கள் புனித ஜார்ஜியார் ஆலயத்திற்கு சென்று வழிபட்டு வரு வது வழக்கமாக உள்ளது.

எனவே, பல நூற்றாண்டுகள் கடந்த பின்பும் தற்போதும் இந்த திருத்தலத்தில் முதல் 10 நாட்கள் தமிழக மக்க ளுக்கு என்றே விழா கொண்டாடப்பட்டு வரு கிறது. எஞ்சிய 10 நாட்கள் கேரள மாநில மக்களுக் காக கொண்டாடப்படு வது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு திருவிழா நேற்று கொடியேற்றத்து டன் தொடங்கி வரும் மே 14ம் தேதி வரை நடக்கி றது. விழா நாட்களில் தின மும் தமிழிலில் திருப் பலி, காலை ஜெபம், திருபுகழ்மாலை நடக்கி றது.

விழா நாட்களில் கர்தி னால் மார் ஜார்ஜ் ஆலஞ் சேரி, ஆயர்கள் மார் ஜார்ஜ் ராஜேந்திரன், ஜூடு பால் ராஜ், பீட்டர் ரெமிஜியூஸ், பால் ஆன்றனி, மாத்யூஸ், ஜோசப் பெருந்தோட்டம் மற்றும் அருட்பணியாளர் கள் தலைமையில் திருப் பலி நடைபெறுகிறது. எட்டாமிடம் வரும் 14ம் தேதி திருப்பவனியுடன் விழா நிறைவடைகிறது. விழாவை முன்னிட்டு குமரி மாவட்டத்தில் இருந்து சிறப்பு பேருந்து சேவை செய்யப்படுள் ளது.




கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இரண்டாம் போக நெல் விளைச்சல் அமோகம், நெல்லுக்கான உரிய விலையை உயர்த்தி வழங்கி, நெல்கொள் முதல் நிலையமும் அமைக்க வேண்டுமென பாசன விவசாயியான எல். சுப்பிரமணியன் கோரிக்கை,

# தேசிய அளவிலான மல்யுத்தப் போட்டிக்கு குமரி மாவட்ட பள்ளி மாணவன் தேர்வு



நாகர்கோவில், ஏப்.28

நாகர்கோவில், மேலப் பெருவிளையைச் சேர்ந்த சகாய ராஜன் ராதிகா ஆகியோரின் மகன் சஞ்ஜெய். இவர் ஆசாரிப்பள்ளம் பெல்ஃபீல்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வரு கிறார்.

சிறுவயதிலிருந்தே விளையாட்டில் ஆர்வம் கொண்ட இவர் மேலப் பெருவிளை மூவேந்தர் பயிற்சிப் பள்ளியில் மல் யுத்த பயிற்சி பெற்று வரு கிறார். கடந்த 5 ஆண்டுக ளாக மாவட்ட ,மாநில அளவிலான மல்யுத்த போட்டிகளில் பங்கேற்று பல வெற்றிகளைப் பெற் றுள்ளார். மேலும் சிலம் பம், மாரத்தான் ஓட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்டு திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

தற்போது 17 வயதுக் குட்பட்டோருக்கான தேசிய அளவிலான மல் யுத்தப் போட்டிக்குத் தேர்ச்சி பெற்று மகாராஷ் டிராவில் நடைபெற உள்ள தேசிய போட்டி யில் பங்கேற்க உள்ளார்.

விளையாட்டுத் துறையு டன் அறிவியல் துறையி லும் திறமை வெளிப்ப டுத்திய சஞ்ஜெய் குமரி அறிவியல் பேரவை நடத் திய 20232024ஆம் ஆண் டுக்கான இளம் விஞ் ஞானி விருதையும் பெற்றுள்ளார். சஞ்ஜெ யின் இந்த சாதனைக்கு மூவேந்தர் பயிற்சிப் பள்ளி மாஸ்டர், கோச், வீரர்கள் மற்றும் பொது மக்கள் பாராட்டு தெரி வித்து வருகின்றனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 வாக்கு எண்ணிக்கையை முன்னிட்டு, வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடுத்தப்படும் மேற்பார்வையாளர், உதவியாளர் மற்றும் நுண்பார்வையாளர்களை கணினி மூலம் முதல் கட்டமாக குலுக்கல் முறையில் தேர்வு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ் தலைமையில் சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது.

# மார்த்தாண்டம் அருகே பணம் நகைகள் மோசடி

### தொழிலதிபர், மனைவிக்கு 3 ஆண்டுகள் சிறை



மார்த்தாண்டம், ஏப்.28

மார்த்தாண்டம் அருகே கீழ்பம்மம்தெற்கு காட்டு விளை பகுதியை சேர்ந்த வர்தேவராஜ். இவர்ஓமன் நாட்டில் காண்ட்ராக்ட ராக பணிபுரிந்து வருகி றார். இவரது மனைவி சிவகலா (47). மார்த்தாண் டம் அருகே குளக்கச்சி பகுதியை சேர்ந்த பிரபல தொழிலதிபர் அலெக் ஸாண்டர் மகன் ஜோய் அலெக்ஸ் (57). இவரது மனைவி மெர்சி(58). தம் பதியின் மகன் சோனி.

அலெக்சாண்டர் மற் றும் மெர்சி தம்பதிக்கும், சிவகலாவுக்கும் இடையே பழக்கம் ஏற் பட்டுள்ளது. இந்நிலை யில் சிவகலாவிடம் ஏரா ளமான பணம் மற்றும் தங்க நகைகள் இருப்பதை தெரிந்து கொண்டு ஜோய் அலெக்ஸ் மற்றும் மெர்சி ஆகியோர் தங்களுக்கு வங்கியில் உள்ள கடனை தீர்க்க சிவகலாவிடம் பணம் மற்றும் நகைகளை கடனாக கேட்டுள்ளனர்.

சிவகலா 2 கோடியே 85 லட்சம் ரூபாய் மற்றும் 200 சவரன் தங்க நகை களை அவர்களிடம் கொடுத்ததாகவும் பல ஆண்டுகள் கடந்த பின் பும் அவற்றை திருப்பி கொடுக்கவில்லை என வும் கூறப்படுகிறது. ஜோய் அலக்சுக்கு சொந்த மான சொத்தை விற்று பணத்தை தரலாம் எனக் கூறிவிட்டு,சிவகலாவுக்கு தெரியாமல் சொத்தை விற்றதை கேள்விபட்டு பத்திரப்பதிவு அலுவல கத்துக்கு வந்த சிவகலா, ஜோய் அலெக்சின்காலில் விழுந்து கதறிய நிகழ்வும் நடந்தது.

எனினும் பணத்தை கொடுக்காததால் சிவ கலா, ஜோய் அலெக்ஸ் அவரது மனைவி மெர்சி மற்றும் மகன் சோனி ஆகி யோர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவில் புகார் செய்துள்ளார்.

இது தொடர்பானவழக்கு குழித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2ல் நடந்து வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதி பதி இசக்கி மகேஸ்குமார், குற்றம் சாட்டப்பட்ட ஜோய் அலெக்ஸ் மற்றும் அவரது மனைவி மெர்சி ஆகிய இருவருக்கும் 3 ஆண்டுகள் சிறைத் தண்ட னையும் தலா 10 ஆயிரம் ரூபாய் அபராதவும் விதித்து பரபரப்பு தீர்ப்பு வழங்கி உள்ளார்.

இந்த வழக்கிலிருந்து ஜோய் அலெக்சின் மகன் சோனி விடுவிக்கப்பட்டுள்ளார். மோசடி வழக்கில் தொழி லதிபர் மற்றும் மனை விக்கு ஜெயில் தண்டனை விதிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.